**கவனிக்க.**-2022.04.29 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி VI இல் 2022 ஆம் ஆண்டுக்கான கொழும்பு மாவட்டத்துக்குரிய நீதாசன வலயங்களுக்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2278 - 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2022.04.29

2278 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 721 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 725 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 716 | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, மே மாதம் 20ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, மே மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.


715 - B 082339 - 5403 (2022/04)

# ஆய விற்பனையும் குத்தகையும்

## மஹவெவ பிரதேச செயலாளர் பிரிவு

*2022 ஆம் ஆண்டு ஆடி மாதம் 1 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2022/2023*

2022 ஆம் ஆண்டு ஆடி மாதம் 01 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் கள்ளு சில்லறை விற்பனைக்காக 1982 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் வெளியான கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை நிபந்தனைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடும் கள்ளுத் தவறணைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்படும்.

2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய மாதிரி கேள்விப்பத்திரமொன்றில் தயார் செய்யப்பட வேண்டியுள்ளதுடன் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்விப்பத்திர வைப்புப் பணம் வைப்பிலிட்டமைக்கான பற்றுச்சீட்டும் குறிப்பிட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட விலையில் 15% க்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட பெறுமதி அத்தாட்சிப்பத்திரமும் இணைக்கப்படல் வேண்டும்.

3. முறையாக நிரப்பப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் சீல் வைக்கப்பட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் "............. இல. ............கள்ளுத் தவறணைக்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கள்ளுத் தவறணைகளுக்கான பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2022.06.02 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு முன்பதாக மஹவெவ பிரதேச செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லாதவிடத்து அக்குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பு மஹவெவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் முன் வைப்பதற்கு 1982.08.20 ஆந் திகதி வெளியிடப்பட்ட 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2022.06.02 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் முடிவடைந்ததும் கேள்விப்பத்திரங்கள் உடனே திறக்கப்படும். அச் சந்தர்ப்பத்தில் கேள்விப்பத்திரங்களை முன் வைத்த அனைவரும் மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட திகதிக்கு விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணைகள் குத்தகை மீண்டும் விற்றல் 2022.07.04 ஆந் திகதி மு..ப.10.30 மணிக்கு நடைபெறும். அத்திகதிக்கு கேள்விப்பத்திரங்கள் முன் வைப்பது மேற்குறிப்பிட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

7. இது பற்றிய மேலதிக விபரங்களை மஹவெவ பிரதேச செயலாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல. 032- 2254231, 032- 2252061)

எச். எம். நதீஜா ஹேரத்,
பிரதேச செயலாளர்,
மஹவெவ.

பிரதேச செயலகம்,
மஹவெவ,
2022.04.19.

### அட்டவணை

| தவறணையின் இல. | கிராமம் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா ச. |
|---|---|---|
| 16 | அடப்பரகம | 500.00 |
| 17 | மட்டாகொடுவ | 500.00 |
| 18 | தொடுவாவ - வடக்கு | 1,000 .00 |

4- 787

## ஆரச்சிக்கட்டு பிரதேச செயலாளர் பிரிவு

*2022, யூலை மாதம் முதல் 2023, யூன் மாதம் வரை கள்ளுத் தவறணை குத்தகையும் விற்பனையும் 2022/2023*

*2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதியில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்காக 1982 , ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைவாக இத்துடன் கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி கள்ளுத்தவறணை விற்பனைக்காக குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைக்கு அமைவாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. சகல கேள்விப்பத்திரங்களும் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய கேள்விப் பத்திரத்திற்கான பணம் வைப்புச் செய்தமைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டும் சம்பந்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்தொகையில் 15 % பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட சகல கேள்விப்பத்திரங்களும் பெயரிடப்பட்ட உறையிலிட்டு இடது பக்க மேல் மூலையில் ............. இலக்க கள்ளுத் தவறணைக்காக , கேள்விப்பத்திரங்கள் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையின்படி தவறணையின் பெயரும் இலக்கமும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு 2022.05.27 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு ஆராச்சிக்கட்டு பிரதேச செயலாளருக்கு கிடைக்கும் முகமாக பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். அல்லது மேற்குறிப்பிட்ட திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக ஆரச்சிக்கட்டு பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியினுள் இடுதல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*5. 2022.05.27 ஆந் திகதி காலை 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அத்தருணம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் அப் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*குறித்த திகதியில் விற்கப்படாத தவறணைகள் 2022.06.27 ஆந் திகதி முற்பகல் 10.30 மணியளவில் மறு விற்பனைக்காக விடப்படும். அன்றைய தினம் ஏல முன் வைப்பு குறித்த வரியினை பிரமாணங்களுக்கு அமைவாக இடம்பெறும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்களை ஆரச்சிக்கட்டு பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (032- 4934343).*

*ஈ.ஏ.டீ.எம்.அத்துகோரள,*
*பிரதேச செயலாளர்,*
*ஆரச்சிக்கட்டு.*

### அட்டவணை

| பிரிவு | கிராமம் | தவறணை இலக்கம் | கேள்விப் பத்திரங்கள் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப் பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| ஆரச்சிக்கட்டு | ஆரச்சிக்கட்டு | 11 | 2022.05.27 மு.ப.10.30 | 1,000.00 |
| ஆரச்சிக்கட்டு | பத்துளுஓயா | 12 | 2022.05.27 மு.ப.10.30 | 1,000.00 |

*4- 928*

## கள்ளுத்தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2022/2023

## வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவு

2022ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத்தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207ஆம் இலக்க கள்ளுத்தவறணை குத்தகைக்கு கொடுக்கப்படும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிமப்படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக பிரதேச செயலகத்தில் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு "........................... ஆம் இலக்க ....................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 2022.05.18 ஆந் திகதி தொடக்கம் 2022.05.31 ஆந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு முன்பு வென்னப்புவ பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982.08.20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும்.

5. 2022.05.31 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைவதுடன் உடனே எல்லா கேள்விப் பத்திரங்களும் திறக்கப்படும். அச்சமயத்தில் கேள்விப்பத்திரக் கோரிக்கையாளர்கள் அல்லது அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் இச்செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

6. மேற் குறிப்பிட்ட திகதியில் விற்பனை செய்யப்படாத கள்ளுத்தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2022.07.01 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு மீண்டும் இடம்பெறுவதுடன் இதற்கான கேள்விப் பத்திரங்கள் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி மேற்குறிப்பிடப்பட்டவாறு அமைதல் வேண்டும்.

7. இது தொடர்பான மேலதிக விபரங்கள் வென்னப்புவ பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். (031- 5679170).

யூ.எஸ். என். பிரனாந்து,
பிரதேச செயலாளர்,
வென்னப்புவ.

பிரதேச செயலகம்,
வென்னப்புவ.

**அட்டவணை**

| தொடர் இல. | பிரதேசம் | கிராமம் | கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் பத்திர வைப்புத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 1. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தம்பரவில் | 2022.05.31 மு.ப. 10.30 மணிக்கு | 500.00 |
| 2. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நஞ்சுண்டான்கரை | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 250.00 |
| 3. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வைக்கால் | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 4. | வென்னப்புவ பி.செ. பிரிவு | பொரலெஸ்ஸ | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 5. | வென்னப்புவ பி.செ. பிரிவு | தும்மலதெனிய | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |
| 6. | வென்னப்புவ பி.செ.பிரிவு | உள்ஹிட்டியாவ | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 7. | வென்னப்புவ பி.செ. பிரிவு | லுணுவில | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 500.00 |
| 8. | வென்னப்புவ பி.செ. பிரிவு | வென்னப்புவ | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 2,000.00 |
| 9. | வென்னப்புவ பி.செ. பிரிவு | நயினமடம | 2022.05.31 மு.ப.10.30 மணிக்கு | 1,000.00 |

| தவறணை திறக்கப்படும் நேரம் | மூடப்படும் நேரம் |
|---|---|
| மு.ப.10.00 | பி.ப. 2.00 |
| பி.ப. 5.00 | பி.ப. 9.00 |

4-936

## சிலாபம் பிரதேச செயலகப் பிரிவு

கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை 2022 /2023

2022.07.01ஆந் திகதி முதல் 2023.06.30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகள் சில்லறையாக விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணத்தை செலுத்தியதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணபிக்கும் தொகையில் 15% பெறுமதியான பெறுமதிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப் பத்திரங்களை முறையாக மூடப்பட்ட கடித உறையிலிட்டு அதன் இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு “ .................... இலக்கம் கொண்ட ..................... கள்ளுத்தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்” எனக் குறிப்பிடப்பட்டு 2022.05.26ஆம் திகதி மு. ப. 10.30 மணிக்கு முன்பு சிலாபம் பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், சிலாபம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. 2022 ஆம் ஆண்டுக்கான கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.

5. 2022.05.26 ஆந் திகதி மு.ப. 10.30. மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அச்சந்தர்ப்பத்தில் சகல கேள்விப்பத்திர கோரிக்கைதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சிலாபம் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிடப்பட்ட திகதியில் விற்பனையாகாத கள்ளுத் தவறணைகள் ஏதும் இருப்பின் அவற்றுக்கான மீள் விற்பனை 2022.06.27 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைய நடை பெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்களை சிலாபம் பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
தொலைபேசி இலக்கம்( 032- 2223205 /032- 2222138.)

### அட்டவணை

| தொடர் இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் இறுதித் திகதியும் நேரமும் | கேள்விப்பத்திர வைப்புப் பணம் ரூபா |
|---|---|---|---|---|
| 1 | சிலாபம் வாட்டு இல.2 | இச்சம்பிட்டி | 2022.05.26 மு.ப.10.30 | 2,000.00 |
| 2 | சிலாபம் வாட்டு இல. 3 | பிரிவினுள் வேறொரு இடம் தேவைப்பட்டுள்ளது | 2022.05.26 மு.ப.10.30 | 1,000.00 |
| 3 | பிடிகல் கோரளை | ஒலிதலுவ | 2022.05.26 மு.ப.10.30 | 250.00 |

பீ.டப்.எம்.எம்.எஸ். பண்டார,
பிரதேச செயலாளர்,
சிலாபம்.

பிரதேச செயலகம்,
சிலாபம்,
2022.04.21.

4- 1037

## நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவு

## கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை
## 2022 யூலை மாதம் முதல் 2023 யூன் மாதம் வரை

*2022 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி முதல் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப்பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாகக் கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்களும் பொது நிபந்தனையாகும். 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் கள்ளுத்தவறணைகள் குத்தகை இடும் நிபந்தனைகளுக்கு அமைவானதாகும்.*

*3. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிக்கப்படுவதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப்பணமாக நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% அத்தாட்சி சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*4. கேள்விப் பத்திரங்கள் முறையாக பொதியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடது பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு " 01 மூதுகடுவ கள்ளுத்தவறணை " அல்லது " 02 கடுநேரிய கள்ளுத்தவறணை" எனக் குறிப்பிடப்பட்டு 2022.05.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு முன்பு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் இடுதல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிடப்பட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாய் "பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், நாத்தாண்டிய" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.*

*5. கேள்விப் பத்திரங்கள் 1982 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய இருத்தல் வேண்டும்.*

*6. 2022.05.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்த நேரம் மனுதாரர் அனைவரும் இச் செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.*

*7. மேற்குறிப்பிடப்பட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின், அவற்றுக்கான மீள் விற்பனை 2022.05.30 ஆந் திகதி காலை 10.30 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.*

*இது தொடர்பாக மேலதிக விபரங்கள் நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.*

*சதுரங்க ஜயசிங்ஹ,*
*பிரதேச செயலாளர்,*
*நாத்தாண்டிய.*

*பிரதேச செயலகம்,*
*நாத்தாண்டிய,*
*2022.04.19.*

### அட்டவணை

| இல. | வலயம் | கிராமம் | குத்தகை விற்பனை தொகை |
|---|---|---|---|
| 1. | நாத்தாண்டிய | மூதுகடுவ | ரூ.1,000.00 |
| 2. | நாத்தாண்டிய | கட்டுனேரிய | ரூ.1,000.00 |

*4-987*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவிப்பு

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புடைமைக் கம்பனியைக் கூட்டிணைத்தல் தொடர்பான பொது அறிவித்தல்.-*

*கம்பனியின் பெயர்:* ஜெசிட் அலுமினியம் (வரையறுக்கப்பட்ட ) தனியார் நிறுவனம்
*கம்பனி இலக்கம்:* பீ.வீ. 00255777
*கூட்டிணைக்கப்பட்ட திகதி:* 2022, சித்திரை 01
*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.30/1A, பஹலகரகஹாமுன, கடவத்த

எச்.எம்.ஈ.டி.எச்.கும்புறுலந்த,
நிறுவன செயலாளர்
(அற்றோணி அலுவலர்),

ஜெசிட் அலுமினியம்
(வரையறுக்கப்பட்ட ) தனியார் நிறுவனம்.

4- 924

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)8 ஆம் பிரிவின் கீழ்* பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர்:* மாஸ் பிரான்ட்ஸ் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பிவீ 87382
*பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி:* 2022, ஏப்பிறல் 14
*பதிவு முகவரி :* இல. 199, கடுவெல வீதி, பத்தரமுல்ல
*கம்பனியின் புதிய பெயர்:* அமந்தே லங்கா (பிரைவட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

Corporate Services (Private) Limited,
Amante Lanka ( Private) Limited,
செயலாளர்கள்.

04- 1091

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2)8 ஆம் பிரிவின் கீழ்* பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

*கம்பனியின் முன்னைய பெயர்:* மாஸ் ப்ரேன்ட்ஸ் எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
*பதிவிலக்கம் :* பிவீ 118202
*பெயர் மாற்றம் செய்யப்பட்ட திகதி:* 2022, ஏப்பிறல் 19
*பதிவு முகவரி :* இல. 199, கடுவெல வீதி, பத்தரமுல்ல
*கம்பனியின் புதிய பெயர்:* அமந்தே எக்ஸ்போர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

Corporate Services (Private) Limited,
Amante Exports ( Private) Limited,
செயலாளர்கள்.

04- 1089

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ்* மர்லின் பிஷின் (பிவிடி) எல்டீடி தனது பெயரை ஒட்டோ நெட்டிக் ஹோம் சொலூஷன்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் என பெயர் மாற்றம் செய்வதாக சொல்லப்பட்ட சட்டத்தின் 8 ஆம் பிரிவின் விதிகளின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.-

*கம்பனியின் பழைய பெயர்:* மர்லின் பிஷின் (பிவிடி) எல்டீடி
*கம்பனி இலக்கம் :* பிவீ 102768
*பதிவு அலுவலகம் :* இல. 10B1, கோபுரம் 3, 320, யூனியன் பிளேஸ், கொழும்பு -02
*கம்பனியின் புதிய பெயர்:* ஒட்டோ நெட்டிக் ஹோம் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்படேட் சேர்விசஸ் ( பிரைவட்) லிமிட்டட் ,
செயலாளர்கள்.
ஒட்டோ நெட்டிக் ஹோம் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்.

04- 1090

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல.92, ஒரிசாட் நிவாச, மாலபே என்ற முகவரியில் வசிக்கும் வாசனா பண்டார கௌசலயா ஹேரத் சேனசேகர ஆகிய நான், இல. 21, சாந்தானம்பிட்டிய வீதி, எம்புல்தெனிய, நுகேகொடை என்ற முகவரியில் வசிக்கும் உறேஷ் நொளிந்த சேனசேகர என்பவருக்கு 2008.01.01 ஆந் திகதி K.A.P. குணதிலக நொத்தாரிசினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல.218, என்ற அற்றோணித் தத்துவப் பத்திரத்திரத்தினால் வழங்கப் பட்ட அனைத்து தத்துவங்களையும் அதிகாரங்களையும் இத்தால் மூலம் மீளப்பெற்று இல்லாதொழிக்கின்றேன்.

இவ் அறிவித்தல்வெளியிடப்பட்டதன் பின்னர், உறேஷ்நொளின்ட சேனசேகரவினால் இல. 218 என்ற அற்றோணிப்பத்திரத்தின் கீழ் செய்யப்படுகின்ற எந்த செயலும் எனது செயல்களாகவோ

அல்லது எனது பெயரில் செய்யப்பட்டதாகவோ அல்லது எனது சார்பில் செய்யப்பட்டதாகவோ கருதப்பட மாட்டாது.

வாசனா பண்டார கௌசலயா ஹேரத்
சேனசேகர.

04- 724

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கேகாலை, மீபிட்டிய, 684 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த உடவெல ஹேவஹே ரோஹண ஜனசந்திர டி. சில்வா அல்லது உடவெல ஹேவஹே லால் சில்வா (தே.அ.அ.இல. 680720495V) ஆகிய பிரதான அற்றோணியாகிய நான், எனது அற்றோணித்தத்துவகாரராக கேகாலை, பொல்கஹவெல வீதி, பாணகாவ 02, B2/29 என்ற இலக்கத்தைச் சேர்ந்த வைத்தியரத்ன ஹேரத் முதியான்செலாகே அச்சினி தாரக்க ஜயவிக்ரம (தே.அ.அ.இல. 856881326V) என்பவரை 2014.12.15 ஆந் திகதியிடப்பட்டதும் சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய புஸ்பக்க ஸ்ரீலால் தயானந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் 639 என்ற இலக்கத்தைக் கொண்டதுமான அற்றோணித் தத்துவமானது இத்தால் இல்லாதொழிக்கப்பட்டு அத்துடன் இரத்துச் செய்யப்பட்டதென இக்குடியரசிற்கும் அதனது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். எதிர்காலத்தில் மேற்கூறப்பட்டுள்ள வைத்தியரத்ன ஹேரத் முதியான்சேலாகே அச்சினி தாரக்க ஜயவிக்ரம ஆகிய எனது அற்றோணித் தத்துவக்காரரினால் மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கலுக்கும் செயற்பாட்டிற்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் எனவும் மேலதிகமாக அறிவிக்கின்றேன்.

உடவெல ஹேவஹே ரோஹண
ஜினசந்திர டி. சில்வா
அல்லது உடவெல ஹேவஹே லால்
சில்வா ,
பிரதான அற்றோணி.

04-930

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

தெஹிவளை, அத்திடிய பிரதான வீதி, 4 ஆம் ஒழுங்கை, இல.288/ 7B எனும் இடத்தில் வசித்த தற்போது அமெரிக்க ஐக்கிய குடியரசு, நிவ்யோர்க், ஸ்டேர்டன் ஐலண்ட், 10301, அவோன் பிளேஸ், இல. 60 இல் வசிக்கும் அஜித் பிரியங்கர ஹேனொகொட விதானச்சி (தே.அ.அ.இல.671770480V மற்றும் கடவுச்சீட்டு இல. N 5428404) ஆகிய நான், கொழும்பு பகிரங்க நொத்தாரிசு திருமதி R.A.D. ரணகலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அமெரிக்க ஐக்கிய குடியரசின் நிவ்யோர்க் ரிச்மண்ட் இல் எழுதி உறுதிப்படுத்தப்பட்ட பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் மேல் மாகாண வலயப் பணிமனையில் 2018.05.14 ஆந் திகதி தினப்புத்தக இல.2462 பந்தி இல. 74 மற்றும் வரி இல. 220 எனும் வெளிநாட்டு விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் தெஹிவளை, அத்திடிய, பிரதான வீதி, 4 ஆம் ஒழுங்கை, இல.268/ 7B எனுமிடத்தில் வசிக்கும் எனது மாமியாரான திருமதி ஜெனிபர் மொரின் சேன் ரிச்சர்ட் (தே.அ.அ.இல. 516242078V) என்பவரை நியமித்ததுடன் 2022.04.19 ஆந் திகதி அமுலுக்கு வருமாறு மேற்படி வெளிநாட்டு விசேட அற்றோணித் தத்துவத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்ட அதிகாரம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவித்துக் கொள்வதுடன் எனது அற்றோணித் தத்துவகாரராக அவாரால் இன்று முதல் மேற்கொள்ளப்படும் எந்தச் செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புக்கூற மாட்டேன் என்பதையும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

அஜித் பிரியங்கர ஹேனொகொட
விதானச்சி.

2022.04.19.

04-1032

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு-07, சினமன் தோட்டம், ரெய்ட் அவெனியூ, இலக்கம் 10/1, தற்போது ராஜகிரிய, புத்கமுவ வீதி, fairmount ரெசிடென்சிஸ், இலக்கம் 14C கொண்ட இடத்தில் வசிக்கும் மிடகொடகே தரிந்து விஜயசேன (தே.அ.அ.இல. 821551358V) என்ற நான், பகிரங்க நொத்தாரிசு S.R. நாராயணசுவாமி அவர்களால் எழுதி உறுதி செய்யப்பட்ட இலக்கம் 4792 மற்றும் 2012.09.11 ஆந் திகதி கொண்ட அற்றோணித் தத்துவத்தின் மூலம் கொழும்பு -07, சினமன் தோட்டம், ரெய்ட் அவெனியூ, இலக்கம் 10/1 ஐச் சேர்ந்த மிடகொடகே துஷித்த விஜயசேன (தே.அ.அ.இல. 583010572V) இடம் வழங்கப்பட்ட அதிகாரத்தை 2022.04.25 ஆந் திகதி தொடக்கம் இரத்துச் செய்கின்றேன் என்றும் அன்றைய திகதிக்குப் பின்னர் அவர் மூலம் செய்யப்படுகின்ற எந்த ஒரு செயலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் மற்றும் பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மிடகொடகே தரிந்து விஜயசேன.

04-1100

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

## சி.ஐ.சி. அக்ரி பயோடெக் (பிரைவேட்) லிமிடெட் கம்பனி இலக்கம் & PV 2257

அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

சி.ஐ.சி. அக்ரி பயோடெக் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியானது அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு என்ற வகையில் இக் கம்பனியை கலைக்கவும் 3 ஆவது மாடி, இலக்கம் 09- 2/3, பள்ளி பாதை, கொழும்பு 03 என்ற முகவரியைச் சேர்ந்த பட்டய கணக்காளரான திரு. சுமித் ரன்வத்த அவர்கள் இக் கம்பனியின்

கலைப்பாளராக 2022, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட விஷேட மகாசபைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டு அன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது என்பது 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 319(1) (b) பிரிவின் பிரகாரம் உறுதிசெய்யப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

3 ஆவது மாடி,
இல. 09- 2/3,
பள்ளி பாதை,
கொழும்பு -03.

4- 786/1

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்

## சி.ஐ.சி. அக்ரி பயோடெக் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனி இலக்கம் PV 2257

கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவித்தல்

2022, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக் கம்பனியின் விஷேட மகா சபைக் கூட்டத்தில் சி.ஐ.சி. அக்ரி பயோடெக் ( பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விஷேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் பட்டய காணக்காளரான சுமித் ரன்வத்த ஆகிய நான், நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை 3 ஆவது மாடி, இலக்கம் 09-2/3, பள்ளி பாதை, கொழும்பு 03 எனும் இடத்தை சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

எஸ். ரன்வத்த,
கலைப்பாளர்.

3 ஆவது மாடி,
இல. 09- 2/3,
பள்ளி பாதை,
கொழும்பு -03.

4- 786/2

---

## ஒருங்கிணைப்பு பற்றிய பகிரங்க அறிவித்தல்

## கெலனி வெலி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி (கம்பனி இல. PQ 58) மற்றும் கெலனி வெலி இன்ஸ்டன்ற் டீ (பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV5303)

கெலனி வெலி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. (கம்பனி இல. PV 58) , கெலனி வெலி இன்ஸ்டன்ற் டீ ( பிறைவேட்) லிமிட்டட் (கம்பனி இல. PV 5303) ஆகிய இரண்டும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச் சட்டத்தின் (“அதிகாரச் சட்டம்”) 242 ஆம் பிரிவிற்கு இணங்க ஒரே நிறுவனமாக ஒருங்கிணைக்கப்பட இருக்கின்றன என்பது அதிகாரச் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவுக்கு அமைய இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் கெலனி வெலி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. என்பதாக இருக்கும். கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் ஒருங்கிணைப்புச் சான்றிதழ் வழங்கப்படும் திகதியிலிருந்து இந்த ஒருங்கிணைப்பு நடைமுறைக்கு வரும்.

ஒருங்கிணைக்கப்பட்ட நிறுவனமாகிய கெலனி வெலி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி. யின் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் அமைந்திருக்கும்.

ஒருங்கிணைக்கப்படும் நிறுவனமொன்றின் எவரேனுமொரு பங்குதாரர் அல்லது கடன் வழங்கியவர், அல்லது ஒருங்கிணைக்கப்படும் ஒரு நிறுவனம் கடப்பாட்டைக் கொண்டிருக்கும் ஒரு நபர், ஒருங்கிணைப்புப் பிரேரணையின் பிரதிகளை இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10 என்னும் முகவரியில் வழமையான வேலை நேரங்களில் பார்வையிட முடியும்.

கெலனி வெலி பிளான்டேஷன்ஸ் பி.எல்.சி.
மற்றும்
கெலனி வெலி இன்ஸ்டன்ற் டீ ( பிறைவேட்) லிமிட்டட்
சபைகளின் கட்டளைப்படி,

ஹேலீஸ் குரூப் சேர்விசஸ் (பிறைவேட்)
லிமிட்டட்
செயலாளர்கள்.

400, டீன்ஸ் வீதி,
கொழும்பு 10,
2022, ஏப்பிறல் 08.

4- 858

---

## வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை இரத்துச் செய்தல்

2022.04.01 ஆந் திகதிய 2274 ஆம் இலக்க வர்த்தமானியில் தமிழ் மொழியில் பிரசுரிக்கப்பட்ட 04-28 ஆம் இலக்க அறிவித்தலானது, பிரசுரிப்பதற்காக அச்சகத்துக்கு வழங்கும் போது ஏற்பட்ட தவறு காரணமாக உரிய அறிவித்தலுக்குப் பதிலாக வேறோரு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. ஆகையினால், மேற்படி வர்த்தமானியில் 04-28 ஆம் அறிவித்தலை 2022.04.01 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

அமரசிங்கலாகே சுனில் சாந்த பெரேரா ,
அற்றோணித்துவகாரர்.

2022.03.04.

அத்துருகிரிய, சந்தசிறிபுர, இல.145 என்ற முகவரியில் வசிக்கும் அமரசிங்கலாகே சுனில் சாந்த பெரேரா ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு முதித்த T.B. ஏக்கநாயக்க அவர்களால் 2016.09.28 ஆந் திகதியன்று எழுதி உறுதிப்படுத்திய இல.11 ஐக் கொண்ட விசேட அற்றோணி அதிகாரத்தின்படி, மஹரகம, பத்திரகொட வீதி, இல. 218 எனும் முகவரியில் வசிக்கும், (தே.அ.அ.இல. 723213983V) ஐக் கொண்ட ராஜபக்ஷ பத்திருன்னேலாகே தொன் குணதிலக வஜிர பண்டாரவுக்கு வழங்கிய அற்றோணித் தத்துவப் பத்திரத்தை 2022.03.04ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன். அத்துடன் குறித்த நபரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல், செயற்பாடுகளுக்கு நான் எந்த வகையிலும் பொறுப்பாளியல்ல.

அமரசிங்கலாகே சுனில் சாந்த பெரேரா ,
அற்றோணிதத்துவகாரர்.

2022.03.04.

04-1031

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கம்பஹா, அளுத்கம, இலக்கம் 109 இல் வசிக்கும் தே.அ.அ.இலக்கம் 198783701615 ஐ உடைய சமரசுந்தர செனெவிரத்ன முஹந்திரம்கே மதுஷானி சாமரீ செனெவிரத்ன ஆகிய நான், ஜா-எல, துடெல்ல சிங்ஹசல வீதி, இலக்கம் 618/பீ இல் வசிக்கும் தே.அ.அ.இல. 199128101646 ஐ உடைய அகில எரந்த விமலசூரிய என்பவருக்கு வழங்கப்பட்டதும், 2020 ஆம் ஆண்டு யூன் 06 ஆந் திகதி கம்பஹா பிரசித்த நொத்தாரிசு திரு. யூ.ஜீ.டி.ஆர். ரணதுங்க என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 455 ஆம் இலக்கமுடைய விசேட அற்றோணித் தத்துவமானது இத்தால் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதெனவும் இதன் பின்னர் என் சார்பில் அவர் மேற்கொள்ளும் எந்தவித நடவடிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களிற்கு நான் பொறுப்புதாரியல்ல எனவும் மேலும் அறிவித்துக் கொள்கின்றேன்.

எஸ். எஸ்.எம்.எம்.சாமரீ செனெவிரத்ன.

04-1038

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கை, வலஹந்துவ, குருந்துவத்த, சிரிலேன, நதிஜா கமல் விக்ரமநாயக்க எனும் கீழே ஒப்பமிட்டுள்ள நான் சொல்லப்பட்ட இலங்கை குடியரசின் வலஹந்துவ, குருந்துவத்தவைச் சேர்ந்த நளின் தமித் விக்ரமநாயக்கவுக்கு என்னால் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவ தினப்புத்தகம் இல. 01, பக்கம் 54 வரிகள் 152 இல் பதிவாளர் நாயகம் அலுவலகத்தில் 1998.12.14 ஆந் திகதி பதிவு செய்யப்பட்ட கொழும்பு பகிரங்க நொத்தாரிசு A. J. P. M. ஜயவர்தனவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1998.09.03 ஆந் திகதியிடப்பட்ட அற்றோணி மதிப்பீட்டு எண் 6042 ஐ உடன் அமுலுக்கு வருமாறு இரத்துச் செய்து இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசகக் குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கின்றேன்.

எனக்காக அல்லது என் சார்பாக சொல்லப்பட்ட நளின் தமித் விக்ரமநாயக்கவினால் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகள் அல்லது விடயங்களுக்கு நான் பொறுப்பாக மாட்டேன்.

நதிஜா கமல் விக்ரமநாயக்க.

2022, ஏப்பிறல் 19.

04-1040

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் நாவலை, கொஸ்வத்தை வீதி, இல. 83 இல் வசிக்கும் அலி இஸ்மயில் ஆகிய நான், என்னால் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஷாந்தி தோமஸ் என்பவரால் தயாரிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திர இல. 3799 , 2018.06.12 ஆந் திகதி இல. 3 Ellesmere Grove Cheltenham glostershire GL 50 2 QQ United Kigdom இல் வசிக்கும் திரு. சுபையினர் சுலைமான் என்பவருக்கு வழங்கப்பட்டதை இன்று முதல் மீளப்பெறுவதோடு, இரத்தும் செய்யப்படுகிறது என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு மற்றும் சகலரும் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

அலி இஸ்மயில்.

04-784

---

## விஷேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கடவத்த, ரன்முதுகல, சீதாவத்த, இல. 427 1/10 எனும் முகவரியை வதிவிடமாகவும் அடையாள அட்டை இலக்கம் 931503804V கொண்ட ரொஷான் சானக டயஸ் ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு நுவான் சின்தக ஹெட்டி ஆராச்சி ஊடாக 2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 026 விஷேட அற்றோணி அனுமதிப்பத்திரத்தை மாகொல, மாகொல வடக்கு, இல. 2/11B எனும் இடத்தை வதிவிடமாகக் கொண்டவரும் அடையாள அட்டை இலக்கம் 923651942V யை உடைய போயாகம ஹீனுகே டசுன் டில்ருக்ஷ என்பவருக்கு அனுமதி அளித்த விசேஷ அற்றோணி அனுமதியை 2022 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 11 ஆந் திகதி முதல் இரத்துச் செய்துள்ளேன் என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

ரொஷான் சானக டயஸ்.

04-856

# ஏல விற்பனைகள்

## மக்கள்வங்கி- மஹியங்கனைக் கிளை
## பெறுமதிமிக்க ஆதனமொன்றின் ஏல விற்பனை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29 D இன் கீழான விற்பனை அறிவித்தல்*

**காணித்துண்டம்**: மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் கந்த பஹல கோறளே, மினிப்பே பிரதேச செயலகப் பிரிவில் அம்பகஹபெலஸ்ஸ கிராம அலுவலர் பிரிவில் அம்பகஹபெலஸ்ஸ கிராமத்தில் அமைந்துள்ளதும், "அம்பகஹபெலஸ்ஸய" என அழைக்கப்படுவதும், உரிமம் பெற்ற நிலஅளவையாளர் ரீ. பீ. எஸ். சங்கரன்தெனிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2004.04.11 ஆந் திகதிய 3686 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதுமான 01 C எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்**: கட்டிடம், பயிர்ச்செய்கை மற்றும் எல்லாவற்றையும் சேர்த்து ஒரு ஏக்கர் இரண்டு றூட் இருபத்தொன்பது பேர்ச் (1ஏ.2றூ.29பே.).

மக்கள் வங்கியினால் எனக்களிக்கப்பட்டஅதிகாரத்தின் கீழ் மக்கள் வங்கி மஹியங்கனைக் கிளையில் 2022, மே 17 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்வேன்.

ஏல விற்பனையானது கொவிட்-19 நடப்பொழுங்குக்கு இசைந்தொழுகி, சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுநெறிகளுக்கு இணங்க நடாத்தப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: 2019.02.08 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.02.08 ஆந் திகதிய தினமின, டெயிலிநியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி**.- மஹியங்கனை நகரிலிருந்து செல்லும் போது கண்டி நகரத்திலுள்ள பாலத்தைக் கடந்ததும் இடப்பக்கமாக ரந்தெனிகல வீதியில் 13 கி.மீ. எனும் மைற்கல்லைத் தாண்டும் போது வீதியின் வலப்புறமாக இவ்வாட்களின் வதிவிட வீடு, நெல் ஆலை மற்றும் நெல் களஞ்சியசாலை என்பன அமைந்துள்ளன. இவை பிரதான வீதிக்கு முகப்பாக உள்ளன.

**கொடுப்பனவு செய்யும் முறை**: ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூரதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனை வரியின் 1% ;
(3) விற்பனை விலையின் 2 1/2% (இரண்டரை சதவீதம் மாத்திரம்) ஏல விற்பனை தரகு;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுனர் கட்டணம் 1,000 ரூபா;
(5) விற்பனையின் மொத்த செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும்;
(6) விற்பனைச் சான்றுப்படுத்தலுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90% ஏல விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம்,இல.24, ஆர். எச். குணவர்தன மாவத்தை, பதுளை என்ற முகவரிக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைபேசி இல.: 055- 2222165, 2222342, 2223067, 2223068
தொலைநகல் இல.: 055- 2222361.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை (10%) மீளச் செலுத்தாது விடுவதற்கும், ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் வங்கி உரித்துடையதாகும்.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் மேறகுறிப்பிடப்பட்ட முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

முன்னறிவிப்பின்றி விற்பனையை நிறுத்துவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை மக்கள் வங்கி கொண்டுள்ளது.

ஈ. எஸ். ராமநாயக்க,
நீதிமன்ற ஆணையாளர்,
உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும் மதிப்பீட்டாளரும்,
சமாதான நீதவான் ( நாடு முழுவதும்).

இல. 11 /55, போகஹவத்த,
குடாபுத்கமுவ,அங்கொடை.
தொ.பே.இல.: 011 2053286, 072-3207533, 076- 9217329.

4- 926

---

## மக்கள் வங்கி - டியூக் வீதி கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் ஏல விற்பனை அறிவித்தல்*

**காணித்துண்டம்** .- மேல் மகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளேயின் பள்ளே பத்துவில், கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட திம்பிரிகஸ்யாய பிரதேச செயலாளர் பிரிவில், கிருலப்பன கிராம அலுவலர் பிரிவிலுள்ள வட்டார இல. 44 இல் கிருலப்பன பூர்வாராம மாவத்தை நெடுகிலும் அமைந்துள்ள "அம்பகஹவத்த" என அழைக்கப்படும் உரிமம்

பெற்ற நிலஅளவையாளர் டீ. பீ. விமலசேன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2005.01.19 ஆந் திகதிய 5242 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்ட 8777 எனும் காணித்துண்டு.

**காணியின் விஸ்தீரணம்**: கட்டிடம், பயிர்கள் மற்றும் எல்லாவற்றையும் சேர்த்தும் முப்பத்து மூன்று தசம் இரண்டு பூச்சியம் பேர்ச்(0ஏ.0றூ. 33.20பே.).

2021.08.21ஆந் திகதி மக்கள் வங்கியினால் எனக்குரித் தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் என்னால் 2022 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு தொடங்குகின்ற பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக** .- 2019.02.15ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2019.02.15ஆந் திகதிய "தினமின", "டெய்லி நிவுஸ் " மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்துக்கான அணுகுவழி**.- கிருலப்பனை ஹை லெவல் வீதியிலிருந்து இடப்பக்கமாக பூர்வாராம வீதிக்குத் திரும்பி , புகையிரத கடவையைக் கடந்து பயணிக்கவும். கந்தவத்த டெரஸ் இற்குப் பின்னரும் கந்தவத்த வீதிக்கு முன்னருமாக இடது கைப்பக்கத்தில் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலத்தின் முடிவில் வெற்றியீட்டிய கொள்வனவாளர்கள் பின்வரும் தொகைகளைக் காசாகச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையில் 10%;
(2) உள்ளூராதிகார சபைக்குச் செலுத்தப்படற்பாலதான உள்ளூராதிகார சபை வரி 1%வரி ;
(3) ஏல விற்பனையாளரின் தரகாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) எழுது வினைஞர் மற்றும் கூவுநர் கட்டணம் 1,000 ரூபா;
(5) விற்பனையின் மொத்தச் செலவு தொகையும் ஏனைய விதிப்பனவுகள் எவையேனும் இருப்பின் அவ்விதிப்பனவுகளும் ;
(6) சான்றுப்படுத்துகைக்கான முத்திரைக் கட்டணம்;

கொள்வனவு விலையின் 90% பணம் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களினுள் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி பிராந்திய தலைமை அலுவலகம், கொழும்பு வடக்கு, இல. 11, டியூக் வீதி, கொழும்பு 1 என்பவருக்குச் செலுத்த வேண்டும்.

தொலைபேசி இல. 011- 2344985, 2323865, 2433876
தொலைநகல்: 011- 2447299.

உரித்துறுதிகளையும் வேறு சம்பந்தப்பட்ட ஆவணங்களையும் பின்வரும் முகவரியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

சொல்லப்பட்ட தொகை மேலே விதிக்கப்பட்டவாறு 30 நாட்களினுள் செலுத்தப்படாவிடின், வங்கியானது ஏலவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையை இழப்பிப்பதற்கும் ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்கும் உரிமையுடையதாதல் வேண்டும்.

ஈ.எஸ். ராமநாயக்க,
நீதிமன்றஆணையாளர்,
உரிமம் பெற்ற ஏல விற்பனையாளரும்
பெறுமதி மதிப்பீட்டாளரும் சமாதான
நீதவானும்
( நாடு முழுவதும்).

இல. 11/55, போகஹவத்த,
குடாபுத்கமுவ, அங்கொடை.

தொலைபேசி இல.: 011- 2053286, 072- 0881044 , 072- 3207533, 076- 9217329.

04- 925

---

## மக்கள்வங்கி - தங்காலை கிளை

காணி நிலம், காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும்
அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க வர்த்தகச் சொத்தின்
ஏல விற்பனை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம்
இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் பிரிவு 29 D இன்
கீழான விற்பனை அறிவித்தல்

அனுமதி பெற்ற நிலஅளவையாளர் H. சிரிபத்தன என்பவரால் தயாரிக்கப்பட்டு 2001.11.07 ஆந் திகதி ஆய்வு செய்யப்பட்ட நில வரைபட இலக்கம் 1896 இல் லொட் C என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்டு களுவிதரங்க வட்ட அல்லது படுவட்ட அல்லது மெதகொரட்டுவ என அழைக்கப்படும் நிலமானது, தென் மாகாணம், அம்பாந்தோட்டை மாவட்டம், தெற்கு கிருவ பத்துவவில் தங்காலை பிரதேச செயலகப் பிரிவில்), தங்காலை மாநகர சபை எல்லைக்குட்பட்ட, மெடகெட்டிய கிராம அலுவலர் பிரிவிக்குட்பட்ட மெடக்கெட்டிய தங்காலையின் அம்பாந்தோட்டை வீதியில் இல. 106 இல் அமைந்துள்ளதும் கூறப்பட்ட லொட் இலக்கம் C காணி,

வடக்கெல்லை: திட்ட இலக்கம் 1896 இல் குறிக்கப்பட்ட லொட் B மற்றும் D;
கிழக்கெல்லை: அம்பாந்தோட்டை வீதியில் இல. 106/1 இல் குறிப்பிடும் டந்துகே வட்ட அல்லது வீரகஹ வட்டவாலும்;
தெற்கெல்லை: அம்பாந்தோட்டை வீதியில் இல.02 இல் குறிப்பிடும் A. A. தீரசேகர நொத்தாரிசுவின் நிலத்தாலும் ;
மேற்கெல்லை: தங்காலையிலிருந்து அம்பாந்தோட்டை வரையிலான பிரதான வீதியாலும்;

சூழப்பட்டிருக்கிறது. 1896 ஆம் இலக்கம் நிலவரைபடத் துக்கேற்ப காணியிலிருக்கும் கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக காணியின் பரப்பளவு பதின்மூன்று தசம் ஒரு பேர்ச். ( 0ஏ.0றூ.13.1பே.) ஆகும். தங்காலை நிலப்பதிவில் G 01/111 இல் பதியப்பட்டுள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப 2022 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு மக்கள் வங்கி - பிராந்திய அலுவலகம், (அம்பாந்தோட்டை) 146A , மாத்தறை வீதி, தங்காலையில், இரண்டாம் மாடியில் விற்பனை செய்கிறேன்.

**சொத்துக்கான வழி**.- தங்காலை நகர பிரதான சுற்றுவட்ட சந்தியிலிருந்து, தங்காலை அம்பாந்தோட்டை பிரதான வீதியில் 250மீற்றர் தூரம் சென்று குறித்த இடத்தை அடையலாம். பிரதான வீதியின் வலப்புறத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2020, யூலை மாதம் 10ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் “டெயிலி நியூஸ்”, “தினமின” மற்றும் “தினகரன்” ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல விற்பனையில் வெற்றி பெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையில் 10%(பத்து சதவீதம்);
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய விற்பனைவரி 1%(ஒரு சதவீதம்);
(3) விற்பனை விலையின் ஏலதாரர் தரகு 2 .5% (இரண்டரை சதவீதம்);
(4) விற்பனைச் செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்);
(5) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி;
(6) கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் பிராந்திய தலைமை அலுவலகம் அம்பாந்தோட்டை, இல. 146A, மாத்தறை வீதி, தங்காலை எனும் முகவரியில் 2 ஆம் மாடியில் அமைந்துள்ள தங்காலை கிளையில் செலுத்தப்படல் வேண்டும்.

மேலே குறிப்பிட்டவாறு 30 நாட்களுக்குள் பணத்தைச் செலுத்த முடியவில்லை எனில் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% இனை பறிமுதல் செய்ய வங்கிக்கு உரிமை உள்ளதுடன் சொத்தை மறுவிற்பனை செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

பிராந்திய முகாமையாளர்,மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், அம்பாந்தோட்டை, தங்காலை கிளை 2ஆம் மாடி, இலக்கம் 146A, மாத்தறை வீதி, தங்காலை.

தொலைபேசி: 047-2220902, 047- 2220903.

முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை இரத்துச் செய்யவும் நிறுத்தவும் வங்கிக்கு உரிமை உண்டு.

டல்லஸ் கெலாட்,
அங்கீகாரம் பெற்ற ஏல
விற்பனையாளர்.

இல 146/3,
கல்தேரா கார்டன்ஸ்,
கீழ் துட்டுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே.இல.: 011- 4367467, 011-4367111.

4- 854

## செலான் வங்கி பீஎல்சீ - கொதட்டுவ கிளை

பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

சுபசிங்ஹ ஆரச்சிகே டொன் டில்ஹான் சஞ்சீவ கடப்பாடுடையவராகவும்/ஈடுவைத்தவராகவும், செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு B.M. ரணவலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.12.18 ஆந் திகதியிடப்பட்ட 108 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால்,

2022 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு காணி அமைந்திருக்கும் இடத்திலேயே என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

இந்த ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட்-19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டல்களுக்கும் அமையவே நடாத்தப்படும்.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், கடுவெல பிரதேச செயலகப் பிரிவில் கலபலுவாவ-491 கிராம அலுவலர் பிரிவினுள் ஹேவாகம் கோரளையில் பல்லேபத்துவில் கடுவெல மாநகர சபை எல்லைக்குள் கலபலுவாவயில் அமைந்துள்ள 54B என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட எம்பரல்லகஹ கும்புர அல்லது எதாகல கும்புர என அழைக்கப்படும் காணி, உரிமம் பெற்ற நில அளவையாளர் J.A.W. கார்வல் ஹோவினால் தயாரிக்கப்பட்ட 21 மற்றும் 2014.02.24 ஆந் திகதியிடப்பட்ட 18/ 2011 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு B1 என அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட பகிரப்பட்ட காணி, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 18/ 2011 இற்கு அமைவாக முப்பதாறு தசம் நான்கு பூச்சியம் பேர்ச். (0ஏ.0றூ.36.40பே.) பேர்ச் விஸ்தீரணத்தைக் கொண்டதுடன், அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதிலுள்ள எல்லாம்.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**.- கொதட்டுவ புதிய நகர் மத்தியிலிருந்து புத்கமுவ வீதியினூடாக 01 கி.மீற்றர் தூரம் மஹா நியர சந்தி வரைக்கும் சென்று, அங்கிருந்து அதே வீதியால் சுமார் 225 மீற்றர் தூரம் சென்று வலது பக்கத்திலுள்ள Password Total Motor Care நிறுவனத்தைத் தாண்டி உட்பாதை ஒதுக்கத்தினூடாக சுமார் 50 மீற்றர் தூரம் சென்று வலது பக்கத்துக்குத் திரும்பி மேலும் 25 மீற்றர் சென்றதும் இந்த இடம் இடது கைப்புறத்தில் உள்ள ஒதுக்குப் பாதை இறுதியில் காணப்படுகிறது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**.- 2021.02.12 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும், 2020.12.08 ஆந் திகதிய "அருண", "டெய்லி ஐலண்ட்"மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .-உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா2500.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "பிரதான முகாமையாளர்-சட்டப் பிரிவு , செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03." தொலைபேசி: 011-2456485, 011-2456479 மற்றும் 011-2456488.

"எதுவித முன்னறிவித்தலுமின்றி மேற்படி ஏல விற்பனையை இடைநிறுத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு."

சந்திமா பிரியதர்ஷினி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-I, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252.

4- 1033

## செலான் வங்கி பீஎல்சீ - அம்பாறைக் கிளை

பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

அம்பாறையை வதிவிடமாகக் கொண்ட எதிரிவீர ஆராச்சிகே ஷாந்த விக்ரமசேகர என்பவர் கடப்பாடுடையவராகவும், ஈடுவைத்த வராகவும், செலான் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு எச். எம். எஸ். குணரத்னவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.03.12 ஆந் திகதியிடப்பட்ட 230 ஆம் இலக்க ஈட்டு முறியின் மீது, வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால்,

